# மொபைல் ஸ்லிங்க் பவுச் செய்யுங்கள்.



**இந்த வீடியோ உங்கள் மொபைல் போனிற்கு நீங்களே சுலபமாக ஒரு பவுச் தைப்பதற்கு உதவியாக இருக்கும். இதை பழகுவதற்கு என்னுடனே நீங்களும் சேர்ந்து ஏன் தைக்கக் கூடாது.**



இதற்கு தேவையானவை 13 இன்ச் நீளமும் 9 இன்ச் அகலமும் உள்ள ஒரு துணி
-உங்கள் செல்போனை விட 3 இன்ச் அதிகமுள்ள ஒரே அளவிலான மூனு துணிகள்
-அலங்கரிப்பதற்கு பட்டன் ஒன்று
-ஒரு இன்ச் அளவில் பீஸ் வெல்க்ரோ
-ஒரு நீளமான ரிப்பன் தோலில் தொங்க விட.

சமஅளவுள்ள மூன்று பீஸ் துணிகளை ஒன்றின் மீது ஒன்று வைத்து இடையில் பிரின்டட் துணி இருக்குமாறு வைக்க வேண்டும். மேலே உள்ள கெட்டித் துணியை நேர் பக்கமும் இடையில் உள்ள பிரின்டட் துணியை நேர் பக்கமும் இங்கே காண்பிப்பது போல் ஒன்றோடு ஒன்று பார்த்தவாறு வைக்க வேண்டும். இவை எல்லாவற்றையும் குண்டுசிகளால் பொருத்திக் கொள்ளவேண்டும்.

இப்போது மிஷினில் துணியை வைத்துக் கொண்டு பேட்டர்ன் நாப்பை யு யிலும் தையல் நீளத்தை 2 க்கும் 3 க்கும் இடையிலும் செட் செய்துகொள்ளுங்கள்.

பின் செய்யப்பட்ட துணியை, கலையாமல் பிரஷர் புட்டின் ஓரத்தில் வைக்க வேண்டும். பிரஷர் புட்டை கீழே இறக்கி தைக்கத் தொடங்கவும். பின்களை அகற்ற மறக்காதீர்கள். மறுமுனைக்கு போனதும் ரிவர்ஸ் தையல் செலக்டரை அழுத்தி ரிவர்ஸ் தையல் போடவேண்டும். ரிலீஸ் செய்துவிட்டு மீண்டும் கடைசி வரை தைக்க வேண்டும். பிரஷர் புட் ஐ தூக்கி துணியை வெளியே எடுத்து த்ரெட் கட்டரால் நூலை கத்தரிக்கவும்.



துணியின் நேர் பக்கத்தை இதுவரை தைத்தீர்கள். இப்பொழுது துணியை பிரித்து ப்ளையின் மற்றும் பிரின்டட் துணி இரண்டுமே தனியே இருக்குமாறு சுருக்கம் இல்லாமல் விரித்து வைக்கவும். மீதமுள்ள நூலை கத்தரிக்கவும்.

தைத்த பாகங்களை பெரிய துண்டு, துணியுடன் நேர் பக்கமாக பார்த்த மாதிரி வைக்கவும். ஓரங்களை சரியாக சரி செய்து பின் செய்து கொள்ளுங்கள். இப்போது பின் செய்யப்பட்ட பகுதியை தைக்கவும். பிரஷர் புட்க்கு கீழே துணியை சரியாக அலைன் செய்ய வேண்டும்.

ரிவர்ஸ் செலக்டரை யுஸ் செய்து ரிவர்ஸ் தையலை போட்டுக் கொண்டே தொடர்ந்து தைக்கவும். முடியும் இடத்திலும் தையலை லாக் செய்யவும்.




பிரஷர் புட் ஐ மேலே தூக்கி துணியை வெளியே எடுத்து மீதமுள்ள நூலை கத்தரிக்கவும். தைத்த பகுதியை திறந்து நீளவாட்டில் மடித்துக் கொள்ளுங்கள். ஓரங்கள் சரியாக இருக்கும் படி வைத்து பிரஷர் புட்டின் கீழ் வைத்துக் கொள்வோம். ரிவர்ஸ் பட்டனால் ரிவர்ஸ் தையலும் போடவும். திறந்திருக்கும் சைட் முழுவதும் தைக்க வேண்டும்.

ஏற்கனவே தைத்துள்ள பகுதி வரும் பொழுது அதை ஒன்றோடு ஒன்று சரியாக பொருத்திக் கொண்டு அதை தைப்பதற்கு விட்ட துணிகளையும் இரண்டு புறமும் திருப்பிக் கொண்டு தொடர்ந்து தைக்க வேண்டும்.





கார்னரில் வளைந்து வரும் இடத்தில் ஷேப் மாறாமல் இருக்கவேண்டும்.
வளைவுகளில் ஸ்பீடை குறைத்துக் கொள்ள வேண்டும். வளைவுகளில் பிரஷர் புட் ஐ தூக்கி ஊசியை கீழே வைத்து துணியை மட்டும் திருப்பிக் கொள்ளலாம். தொடக்கப் புள்ளி வரும் வரை தொடர்ந்து தைக்க வேண்டும். ரிவர்ஸ் செலக்டரை உபயோகித்து, ரிவர்ஸ் தையல் போடவும். முடிந்ததும் துணியை வெளியே எடுத்து நூலை கத்தரிக்கவும்.



இப்போது மூன்று பக்கமும் தைத்து விட்டு ஒரு பக்கம் மட்டும் விட்டு விடவும். வளைவுகள் அழகாக இருக்க வேண்டும். அதனால் தைக்க இடம் விட்ட பகுதியில் இங்கே காட்டி உள்ளது படி சிறிது இடைவெளியில் கத்தரிக்கவும்.இப்பொழுது திறந்திருக்கும் பகுதி வழியாக துணியை வெளியே எடுங்கள். அதன் வளைவுகள் சரியாக வர வேண்டும். வரவில்லை என்றால் ஊசியின் உதவியுடன் தையல் பகுதியை சிறிது தூக்கி விடவும். ஓரங்களை நன்றாக அழுத்தி நீவி
விடவேண்டும். இப்பொழுது திறந்திருக்கும் பகுதியை அரை இன்ச் அளவில் உள் மடித்து விடவேண்டும்.





மடித்த பகுதிகளை சரியாக வைத்து, பிரஷர் புட்க்கு கீழே வைக்க வேண்டும். அதன் மீது ஒரு தையல் போட வேண்டும். வழக்கம் போல் புட் ஐ தூக்கி துணியை வெளியே எடுத்து நூலை கட் பண்ணி விடுங்கள்.
தைத்த பகுதியின் ராங் சைட்
மேலே இருக்கும்படி வைத்துக் கொள்ளுங்கள். வெல்க்ரோவை பிரித்து வளைவான பகுதியின் உள்ளே நடுவில் மேலிருந்து கீழாக
அரை இன்ச் விட்டு தைக்கவும்.

இனி வெல்க்ரோவை சுற்றி தையல் போடவும். இதற்கு பாக்ஸ் தையலை போட்டால் உறுதியாக இருக்கும். கார்னரை சுற்றி தைக்கும் போது ஊசியை கீழே இறக்கி விட்டுக் கொள்ளுங்கள். பிரஷர் புட் ஐ மேலே தூக்கி துணியை மட்டும் திருப்பி தைக்கவும். இதே போல் நான்கு பக்கமும் தைக்க வேண்டும். ரிவர்ஸ் தையலை போட்டு லாக் செய்யவும்.








இவை எல்லாம் முடிந்ததும் பிரஷர் புட் ஐ மேலே தூக்கிக் கொண்டு துணியை வெளியே எடுத்து நூலை கட் பண்ணவும். இப்போது துணியின் கீழ் பகுதியை மடித்துக் கொண்டால் ப்ளாப்பின் மடிப்புக்கு அருகே சேர்ந்துவிடும். கீழே உள்ள துணிக்கு சரியாக மேலே உள்ள ப்ளாப்பை சரிபடுத்திக் கொள்ளுங்கள். நீரில் அழிக்கக் கூடிய மார்க்கரை உபயோகித்து மார்க் செய்து பிக்ஸ் செய்யுங்கள்.

அடுத்து வெல்க்ரோவின் எதிர்பக்கத்தை எடுத்துக்கொண்டு மார்க் செய்த இடத்தில் வைக்கவும். மடிப்பை ஓப்பன் செய்து துணியை மிஷினில் வைக்கவும்.

வெல்க்ரோவின் ஓரத்தில் இருந்து தைக்கத் தொடங்கவும். துணியை வெளியே எடுத்து எல்லா பக்கமும் இருக்கும் நூலை கட் பண்ணவும்.



ராங் சைட் மேலிருக்கும் படி வைத்துக் கொள்ளுங்கள். துணியை மடித்துக் கொண்டால் மேல் பகுதி தையலுக்கு நேர் கீழாக வந்து விடும். மீதி இருப்பது திறந்திருக்கும் பகுதியையும் ஸ்ட்ராப்பையும் சேர்ப்பது தான். இதை சுலபமாக செய்ய ஒரு ரிப்பனை எடுத்துக் கொள்ளுங்கள். இல்லையா நீங்களே ஒரு ஸ்ட்ராப்பை மீதம் இருக்கும் துணியை வைத்து தைக்கலாம்.

ரிப்பனின் ஒரு முனையை மேலிருக்கும் ஓரங்களுக்கு இடையே சொருகிக் கொள்ளவும். இதை பிரஷர் புட்க்கு கீழே வைத்து விட்டு புட் ஐ இறக்கவும். ஓரத்திலிருந்து தைக்கத் தொடங்கி ரிவர்ஸ் தையலை போட்டு லாக் செய்யவும்.







தையல் அழகாக விளிம்பின் அருகிலேயே வருமாறு பார்த்துக் கொள்ளவும். கடைசி வரை தைக்கவும். முடிவில் ரிவர்ஸ் தையலை போட்டு லாக் செய்யவும்.

ரிப்பனை முறுக்கிக் கொள்ளாமல் சரி செய்து கொள்ளுங்கள். ஒரு நுனியை
எதிர்பக்கத்தில் இருக்கும் வாய் பகுதியில் உள்ளே நுழைக்கவும். இது போலவே மறுமுனையிலும் செய்து கொண்டு தைக்கத் தொடங்கி முடிவில் ரிவர்ஸ் தையல் போட்டு முடிக்கவும். எந்த இடமும்
ஏறுமாறாம இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

மிஷினை நிறுத்தி பிரஷர் புட் ஐ தூக்கி துணியை வெளியே எடுத்து நூலை சீர் செய்யுங்கள்.

சிம்பிளான பவுச் ரெடி. வெல்க்ரோ அட்டாச் செய்த இடத்தில் தையல் வெளியே தெரியாத படி ஒரு அழகான பட்டனையோ அல்லது ஒரு க்ரோசெட் பூவையோ பிக்ஸ்
செய்யுங்கள். இதற்கு பேப்ரிக் க்ளுவை பயன்படுத்தி பின்பக்கமும் துணியில் அதை பிக்ஸ் பண்ண வேண்டிய இடத்திலும் ஒரு துளி வைத்து அழுத்தி விடவும். கொஞ்ச நேரம் அசையாத படி வைத்தால் அது ஒட்டிக் கொள்ளும்.
ஸ்டைலாக நீங்கள் எடுத்துக் கொண்டு போக ஒரு பவுச் ரெடி

இது போன்றே சின்ன சின்ன கலை அழகுள்ள பொருட்களை நீங்களே தயாரித்து எங்களிடமும் பகிர்ந்து கொள்ளுங்கள்.